ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஒ) தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2009

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2009), மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2009)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில், என்னுடைய தொகுதியிலும், கடலூர் மாவட்டம் முழுவதும் உள்ள முந்திரி விவசாயிகள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இப்படி ஒரு திட்டம் இருப்பதாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோ, மாவட்ட சமூக நலத் துறை அலுவலர்களோ, அந்தத் துறையினுடைய அதிகாரிகளோ அதற்கான விவரங்களைத் தெரிவிக்காத காரணத்தினால், இதர தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற அனைத்துச் சலுகைகளும்

@ 20–7–2009 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

அந்தத் தொழிலாளர்களிடமிருந்து பறிக்கப்படுகின்றன. முந்திரிக் காடுகளில் தேள் கடித்து, பாம்பு கடித்து அவர்கள் பாதிக்கப்படுகின்றபோது, இந்தத் திட்டத்தின் பயன் அவர்களுக்குச் சென்றடையாமல் இருக்கிறது. எனவே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், இனிவருங்காலங்களில் முந்திரித் தொழிலாளர்களையும் இந்தத் திட்டத்தில் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு, இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுமாறு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கருத்தைப் பதிவு செய்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் விவசாயத் தொழிலாளிகளுக்குக் கொடுக்கக்கூடிய அடையாள அட்டைகள் இன்னும் பல பகுதிகளில் கொடுக்கப்படாமல் இருக்கக்கூடிய காரணத்தினாலே, இன்னும் அவர்களால் சரியான உதவிகளைப் பெற முடியவில்லை. குறிப்பாக, வாணியம்பாடி, வேலூர் வட்டங்களில் இன்னும் அந்த அட்டை கொடுக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடையாள அட்டைகளை உடனடியாக வழங்குவதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா என்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

பிற்பகல் 3–15

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்ப்பதில் பல குளறுபடிகள் நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, கடந்த காலத்தில் உறுப்பினர்கள் சேர்ப்பதில், அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்க அமைப்பினுடைய பிரதிநிதிகளுக்கு முழு அங்கீகாரம் கொடுக்கக்கூடிய ஒரு நிலை இருந்தது. இன்றைக்கு அந்த நிலை மாற்றப்பட்டு, பஞ்சாயத்துவாரியாக அங்கே இருக்கின்ற தலைமை ஆசிரியர், அதேபோல வி.ஏ.ஓ.–க்கள், வருவாய்த் துறை சம்பந்தப்பட்டவர்கள், அந்த வாரியத்தில் உறுப்பினர் பதிவைச் செய்கிறார்கள். அந்த நிலையில் மாற்றத்தைக் கொண்டுவந்து கடந்த காலம் போலவே

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்த பிரதிநிதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, உண்மையிலேயே வறுமைக்கோட்டிற்குக்கீழே இருக்கின்றவர்கள் அந்த நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன்பெறக் கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும்.

அதேபோன்று, வாரிய உறுப்பினர்கள் என்று சொல்லுகின்றபோது, ஒரு குடும்பத்தைச் சார்ந்த உழைக்கின்ற வயது வந்த அனைவருக்கும் அடையாள அட்டை வழங்க வேண்டுமென்ற திருத்தத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் முந்திரி விவசாயிகளையும் விவசாயத் தொழிலாளர் வாரியத்தில் சேர்க்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, தோட்டக் கலைப் பயிரில் அது இடம் பெறும். தோட்டக் கலைப் பயிரில் வரக்கூடியவை அனைத்தும் இடம் பெறும். நீங்கள் சொல்லியிருப்பது புதிதாக இருக்கிறது. எது, எது தோட்டக் கலைப் பயிர் என்று வருகிறதோ, அதிலே norms இருக்கின்றன. கண்டிப்பாக முந்திரி விவசாயமும் தோட்டக் கலைப் பயிரில் வரும். Horticulture-ல்தான் வரும் என்று நினைக்கிறேன். அப்படி வரவில்லையென்றால், அதுபற்றி அரசு கண்டிப்பாகப் பரிசீலிக்கும்.

உறுப்பினர் சேர்ப்பது குறித்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும், திருமதி பத்மாவதி அவர்களும் சொன்னார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே இதுவரை ஏறத்தாழ 75 இலட்சம் குடும்ப அட்டைகள் நாம் கொடுத்திருக்கிறோம். அதில், 1 கோடியே 70 இலட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், யாருக்கு அட்டை கிடைக்கவில்லையென்று மனு செய்தாலும், உடனே கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. போதுமான நிதி இருக்கிறது. அதிலே எந்தக் குளறுபடியும் இல்லை. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பித்தால், நிச்சயமாக விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்புத் திட்டத்திலே எவ்வளவு அட்டைகள் வேண்டுமானாலும் வழங்கப்படும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ குளறுபடி இருக்கிறதென்று சொன்னார்கள். குளறுபடியெல்லாம் ஒன்றும் இல்லை. அதாவது அமைப்புசாரா தொழிலாளர் வாரியத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள் இதிலும் உறுப்பினர்களாக இருக்கக்கூடாது என்பது விதிமுறை. குமரி மாவட்டத்தில், விவசாயத் தொழிலாளர் நல வாரியத்திலும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள், அமைப்புசாரா தொழிலாளர் வாரியத்திலும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இது குறித்து ஆதாரபூர்வமாக அரசுக்குப் புகார் வந்த காரணத்தால்தான் கிராம நிருவாக அலுவலர்கள்தான் ஆரம்பத்திலிருந்து அந்தப் பணிகளைச் செய்கிறார்கள். அந்தப் பணியை வேறு யாரும் செய்யவில்லை. நீங்கள் சொல்வதுபோல, தலைமை ஆசிரியர்கள் செய்யவில்லை. ஒவ்வோர் இடத்திலும் போய் அதை ஆய்வு செய்து அதற்கு அனுமதி வழங்கக்கூடியவர்கள் கிராம நிருவாக அலுவலர்கள்தான். வேறு எந்த அலுவலரும் இதுவரை நியமிக்கப்படவில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பாகவும், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி சார்பாகவும் ஏற்கெனவே அந்த அமைப்புசாரா நல வாரியத்தில் இருப்பவர்களைக் கொண்டு செய்யலாம் என்று கோரிக்கை வைத்தீர்கள். கிராம நிருவாக அலுவலர்தான் அந்த அங்கீகாரத்தைக் கொடுக்கமுடியும்; வேறு வகையில் இல்லை என்பதை அரசு தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. எந்தக் குளறுபடியும் இல்லை. நீங்கள் நாளைக்கே மனு கொடுங்கள். எத்தனை இலட்சம் பேர் மனு கொடுத்தாலும் மாவட்டவாரியாகச் சேர்ப்பதற்கு இந்த அரசு உத்தரவு போட்டிருக்கிறது. நாங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். போதுமான நிதியும் அரசிடம் இருக்கிறது. எனவே, சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்— விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/ 2009) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 3–20

(அஓ) பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2009

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 2009 ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2009), மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2009 ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2009)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) நீங்கள் அடுத்த சட்டமுன்வடிவு பற்றிக்கூடச் சேர்த்துச் சொல்லலாம்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது அரசால் நியமிக்கப்படுகிற மதிப்பீட்டுக் குழு பரிந்துரைக்கிற அல்லது நிர்ணயம் செய்கிற சந்தை மதிப்பின் அடிப்படையிலேதான், பதிவுக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு, பதிவு செய்வதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், சொத்துகளைப் பரிமாற்றம் செய்கிற நேரத்தில், பாகப் பிரிவினை செய்கிற நேரத்தில், விடுதலைப் பத்திரம் எழுதுகிற நேரத்தில், ஒரு குடும்பத்திற்குள்ளான பிரச்சினையின்போது, தந்தையை அடுத்து மகன், மகனை அடுத்து பேரன், இப்படி மூன்று தலைமுறையாக, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த

@ 14–7–2009 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.